**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**

**CC.No. 71/2008**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஆர்த்தி** | தொழில் | : Ph.D – படித்துவருகிறேன். |
| தகப்பனார் பெயர் | : அறிவழகன் | கணவர் பெயர் | : –––––– |
| கிராமம் | : பண்ணைக்காடு (இருப்பு – வத்தலக்குண்டு) | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 26/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 10.08.2026 |

**( எதிரிகள் A1, A3, A4, A6 ஆஜரில் உள்ளனர், எதிரிகள் A2, A5 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு , எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் தற்போது வத்தலக்குண்டில் வசித்து வருகிறேன் . சம்பவம் நடந்த காலகட்டத்தில் நான் நான்காம் வகுப்பு படித்துவந்தேன், வயது தற்போது எனக்கு குறிப்பிட்டு நினைவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எனது அப்பா அறிவழகன் வீட்டில் இல்லை என்றால் சரிதான் . எனது அப்பாவிற்கும், எதிரிகள் உறவினரான மணிகண்டன் என்பவருக்கும் இடையே இந்த வழக்கு சம்பவத்திற்கு நான்கு நாட்கள் முன்பு பிரச்சனை ஏற்பட்டு மணிகண்டன் தற்கொலை செய்து இறந்துவிட்டார் என்றால் அதுகுறித்து எனக்குத்

தெரியாது. மணிகண்டன் இறந்தது சம்பந்தமாக போலீசார் எனது அப்பாவை தேடி வந்ததன் காரணமாக எனது அப்பா வழக்கு சம்பவ தினத்தில் தலைமறைவாக இருந்து வந்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . சம்பவம் காலகட்டத்தில் நான் மிகவும் சிறுவயது இளவர் என்பதால் நடந்த விபரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகள் என் தாயாரின் சேலையை பிடித்து இழுத்ததாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் என் தாயாரிடம் இருந்து போலீசார் அந்த சேலையை கைப்பற்றினார்களா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . சம்பவம் காரணமாக எனது தாயார் மருத்துவமனைக்கு சென்றார்களா என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை . சம்பவத்தில் உடைக்கப்பட்ட டிவியை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை. பீரோவை உடைத்து பணத்தை எடுத்துச் சென்றதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் எவ்வளவு பணத்தை எதிரிகள் எடுத்துச்சென்றார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை. போலீசார் வீட்டில் இருந்த பீரோவை வந்து ஆய்வு செய்தார்களா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. எதிரிகள் என்ன கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார்கள் என்ற அந்த வார்த்தை குறிப்பிட்டுத் தெரியாது . எதிரிகள் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்புக்கம்பியை கைப்பற்றினார்களா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

எதிரிகள் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய கம்பியின் நீள , அகல விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் எனது அப்பா இல்லாத போது எதிரிகள் எனது அப்பாவை கொண்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . சம்பவம் தொடர்பாக எனது அம்மா புகார் கொடுத்தார் . புகாரில் என்ன உள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது. புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் சொன்னதுபோன்று

எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் , எனது தாயார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல , வழக்கு குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல . சம்பவம் குறித்து எனக்கு நினைவுள்ளது. நான் சொன்னது போன்று எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் , நான் சொன்னதுபோன்று எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , என் அப்பாவும், அம்மாவும் எதிரிகளை பழிவாங்க பொய்யாக கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.08.10 16:24:25 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.